

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (8.11.2025) சென்னை, அண்ணா அறிவாலயத்தில், நீலகிரி மாவட்டத்தில் வசிக்கும் பழங்குடியின தோடர் இனத்தை சேர்ந்த மாணவி செல்வி ஆர். நீத்துசின், தோடர் சமுதாயத்தில் முதலாவதாக அரசு ஒதுக்கீட்டின் கீழ் எம்.பி.பி.எஸ். மருத்துவப் படிப்பிற்கு தேர்வு செய்யப்பட்டுள்ளதையொட்டி பெற்றோருடன் சந்தித்து வாழ்த்துப் பெற்றார். உடன் தமிழ்நாடு ஆதிதிராவிடர் பழங்குடியினர் நல ஆணையத்தின் உறுப்பினர் கோடநாடு மு.பொன்தோஸ் உள்ளார்.



ஈரோடு – லக்காபுரம் அரசினர் மேல்நிலைப் பள்ளியில் கூடுதல் வகுப்பறை கட்டிடங்கள் சுமார் 2 கோடியே 97 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 12 வகுப்பறைகள் அமைக்க தொடக்கப் பணிகளும் நடைபெற்றது. துவக்க விழாவில் ஈரோடு பாராளுமன்ற உறுப்பினர் கே.இ.பிரகாஷ் பணியினை துவக்கி வைத்தார்கள். விழாவில் பொதுமக்கள் ஒன்றிய கழகச் செயலாளர் கதிர்வேல், கல்வித்துறை அதிகாரிகள் ஆசிரியப் பெருமக்கள் மாணவ மாணவியர்கள் கலந்து கொண்டார்கள்.

### திருப்பூர் மாநகராட்சிக்குட்பட்ட பகுதியில்

# ரூ.14 கோடியில் அகலப்படுத்தப்பட்ட உயர்மட்டப் பாலம்!

## அமைச்சர் மு.பெ.சாமிநாதன் திறந்து வைத்தார்!

திருப்பூர், நவ.10 -

தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர், கழக துணைப் பொதுச் செயலாளர் மு.பெ.சாமிநாதன், மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர்.மனிஷ் நாரணவரே தலைமையில், மாநகராட்சி மேயர், திருப்பூர் வடக்கு மாவட்டப் பொறுப்பாளர் ந.தினேஷ் குமார் முன்னிலையில் 04.11.2025 செய்வாய்க்கிழமை அன்று திருப்பூர் மாநகராட்சி, வார்டு எண் 43, நடராஜ் திரையரங்கம் அருகில் உட்கட்டமைப்பு மேம்பாட்டு நிதியின் கீழ் ரூ.14 கோடி மதிப்பீட்டில் நொய்யல் ஆற்றின் குறுக்கே அகலப்படுத்தப்பட்ட உயர் மட்ட பாலத்தினை திறந்து வைத்தார்.

அமைச்சர் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது : தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தமிழக மக்கள் முன்னேற்ற த்திற்காக பல்வேறு திட்டங்களை அறிவித்து சிறப்பாக செயல்படுத்தி வருகிறார்கள். முதலமைச்சர் அவர்கள் நமது மாவட்டங்களில் இருக்கக்கூடிய திட்டப் பணிகளை அனைத்தும் விரைவாக மக்களுடைய பயன்பாட்டு ஒப்படைக்க வேண்டும் என்று உத்தரவிட்டுள்ளார்கள். அந்த வகையில் இன்றைய தினம் திருப்பூர் மாநகராட்சி நொய்யல் ஆற்றின் குறுக்கே அகலப்படுத்தப்பட்ட உயர் மட்டப்பாலம் பாலத்தினை பொது மக்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு முன்னாள் முதலமைச்சர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் திருப்பூரை தலைமை இடமாகக் கொண்டு மாவட்டதை உருவாக்கினார்கள். திருப்பூரை தலைமையிடமாகக் கொண்டு கடந்த 2006 லிருந்து 2011 ஆம் ஆண்டுக்கான கழக அரசு நடைபெற்ற பொழுது பல்வேறு பாலங்கள் கட்டப்பட்டுள்ளது. மேலும் தற்பொழுது இரண்டு ரயில்வே மேம்பாலப்பணிகள் நடைபெற்று வருகிறது. விரைவில் பணிகள் முடிக்கப்பட்டு திறக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் உத்தரவின்படி, தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதல்படி திருப்பூர் மாநகராட்சி, வார்டு எண் 43, நடராஜ் திரையரங்கம் அருகில் உட்கட்டமைப்பு மேம்பாட்டு நிதியின் கீழ் ரூ.14.00 கோடி மதிப்பீட்டில் நொய்யல் ஆற்றின் குறுக்கே அகலப்படுத்தப்பட்ட உயர் மட்ட பாலம் பொது மக்கள் பயன் பாட்டிற்கு இன்றைய தினம் திறந்து வைக்கப்பட்டுள்ளது. இப்பாலத்தின் நீளம் 97.30 மீட்டர், அகலம் 12.90 மீட்டர் ஆகும். நொய்யல் ஆற்றின் கரையோரம் இருபுறமும் உள்ள புதிய சாலைகளுக்கு இணைப்பு பாலமாக இப்பாலம் அமைந்துள்ளது. மேலும் மங்கலம் சாலையிலிருந்து இரயில் நிலையம் வழியாக அவிநாசி செல்லும் பொதுமக்கள் மற்றும் வாகன ஓட்டிகளுக்கு சாலை விரிவாக்கம் செய்யப்பட்டுள்ளது. இதன் மூலம் தினசரி 80,000 முதல் 90,000 பொதுமக்கள் பயனடைவார்கள். மேலும், நொய்யல் ஆற்றின் குறுக்கே ஈஸ்வரன் கோவில் சாலையில் ஸ்ரீசக்தி தியேட்டர் அருகில் ரூ.18.00 கோடி மதிப்பீட்டில் பாலம் பணி நடைபெற்று வருகிறது. விரைவாக பாலப்பணிகள் முடிக்க ப்பட்டு பொதுமக்களுடைய பயன்பாட்டிற்கு ஒப்படைக்கப்பட இருக்கிறது.

தமிழ்நாடு முதல மைச்சர் அவர்கள் காணொளிக் காட்சி வாயிலாக வார்டு எண் 41 க்குப்பட்ட தந்தை பெரியார் நகரில் உள்ள ஜமுனை ஓடையின் குறுக்கே ரூ.2.80 கோடி மதிப்பீட்டில் பாலத்தைத் திறந்து வைத்தார்கள் வார்டு எண் 45 க்குப்பட்ட சொர்ணபுரி லேஅவுட் பகுதியிலே சங்கிலிப்பள்ளம் ஓடையின் குறுக்கே உயர்மட்ட பாலம் ரூ.1.50 கோடி மதிப்பீட்டில் கட்டி முடிக்கப்பட்டு பொது மக்களுடைய பயன்பாட்டில் இருக்கிறது.

திருப்பூர் மாவட்டம் உருவாகும் போது வளர்மதி பாலம் அகலப்படுத்தப்பட்டது. பூங்கா பகுதியை இணைக்கக்கூடிய வகையிலே ரூ.22.00 கோடி மதிப்பீட்டில் சுரங்கப் பாலம் அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது. விரைவாக பணி முடி க்கப்பட்டு திறக்கும் போது இந்த பகுதியிலிருக்கக்கூடிய போக்குவரத்து நெரிசல் குறைவதற்கான வாய்ப்பு ஏற்படும். மேலும், ஆண்டிப்பாளையம் பகுதியில் ரயில்வே மேம்பாலம் விரைவில் திறப்பதற்கான பணி நடைபெற்று வருகிறது. 8 வது வார்டு மற்றும் 16 வார்டையும் இணைக்கக் கூடிய வகையில் நல்லாற்றின் குறுக்கே பாலப்பணி நடைபெற்று வருகிறது. அந்த வகையிலே அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளைப் பொறுத்தவரை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி இதுபோன்ற பல்வேறு பணிகள் சிறப்பாக நடைபெற்று வருகிறது என்று செய்தியாளர்களிடம் அமைச்சர் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் மாநகராட்சி ஆணையாளர் எம்.பி.அமித், மாநகராட்சி துணை மேயர் ரா.பாலசுப்பிரமணியம், திருப்பூர் வருவாய் கோட்டாட்சியர் சிவபிரகாஷ், திருப்பூர் மாநகராட்சி மண்டலத்தலைவர்கள் (2ம் மண்டலம்) தம்பி ஆர்.கோவிந்தராஜ், (1ம் மண்டலம்) வெ.உமா மகேஸ்வரி, மாநகராட்சி துணை ஆணையார்கள் மகேஸ்வரி, சுந்தர்ராஜன், நெடுஞ்சாலைத் துறை கோட்டப்பொறியாளர் ரத்தினசாமி,

மாமன்ற உறுப்பினர்கள் பகுதி கழக பொறுப்பாளர் பி.ஆர்.செந்தில்குமார், கல்விக்குழுத் தலைவர் பெ.திவாகரன்,

உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் துறை சாரந்த அலுவலர்கள் கலந்து கொண்டார்கள்.

### கழகத் தலைவர் — முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைக்கிறார்!

# திருச்சி - பொன்மலைப்பட்டியில் அன்புச் சோலைத் திட்டம்!

## மாவட்டக் கழகச் செயலாளர் – அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி அறிக்கை!

திருச்சி, நவ. 10 -

திருச்சி தெற்கு மாவட்டச் செயலாளர் - அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

தி.மு.க. தலைவரும், தமிழக முதல்வருமான மு.க.ஸ்டாலின் நேற்று (9ந் தேதி - ஞாயிற்றுக்கிழமை) இரவு 7.00 மணியளவில் சென்னையில் இருந்து விமானம் மூலம் திருச்சிக்கு வருகை தந்தார்.



திருச்சிக்கு வருகை தந்த தமிழக முதல்வர் - கழக தலைவர் அவர்களுக்கு திருச்சி விமான நிலையத்தில் உற்சாக வரவேற்பளிக்கப்பட்டது.

இன்று (10 ஆம் தேதி) காலை 11 மணிக்கு திருவெறும்பூர் தொகுதி, பொன்மலைபட்டி பகுதியில் பாவை பவுண்டேஷனில் நடைபெறும் முதியோர்களின் பராமரிப்பிற்காக 'அன்புச் சோலை' திட்டத்தை தொடங்கி வைக்கிறார்.

இந்நிகழ்ச்சியில் மாநில, மாவட்ட, மாநகர நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், பகுதி, ஒன்றிய, நகர, பேரூர், வட்ட, வார்டு, கிளைக் கழக செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், அனைத்து அணிகளின் நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், தொண்டர்கள் பெரும் திரளாக கலந்து கொள்ள வேண்டுமாய் மாவட்டச் செயலாளர் - அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி தெரிவித்துள்ளார்.

### கழக சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவின்

# மாநில - மாவட்ட நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம்!

## செயலாளர் டாக்டர் அ.சுபேர்கான் அறிவிப்பு!

சென்னை, நவ.10 -

கழகத் தலைவர் தமிழ்நாடு முதல்வர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, கழக இளைஞரணிச் செயலாளர் தமிழ்நாடு துணை முதல்வர் அவர்களின் ஆலோசனையின்படி கழக சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவின் மாநில நிர்வாகிகள், மாவட்ட, மாநகர அமைப்பாளர்கள் மற்றும் தலைவர்கள் ஆலோசனைக்கூட்டம் வரும் 13.11.25 (வியாழன்) அன்று காலை 10 மணியளவில் அண்ணா அறிவாலயம் கலைஞர் அரங்கில் நடைபெறவுள்ளது.

எனவே இந்நிகழ்வில் கழக சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவின் மாநில நிர்வாகிகள், மாவட்ட , மாநகர அமைப்பாளர்கள் மற்றும் தலைவர்கள் அனைவரும் தவறாமல் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

பொருள்: கழக இளைஞரணிச் செயலாளர் தமிழ்நாடு துணை முதல்வர் அவர்களின் பிறந்தநாள் விழா கொண்டாட்டம், வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம் மற்றும் கழக ஆக்கப்பணிகள் தொடர்பாக.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.



அரியலூர் மாவட்ட கழக ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள் கூட்டம் மாவட்டக் கழக அலுவலகத்தில் கழக சட்டத்திட்ட திருத்தக்குழு இணை செயலாளர் சுபா.சந்திரசேகர் தலைமையில் நடைபெற்றது. கூட்டத்தில் மாவட்ட கழக செயலாளர், அமைச்சர் சா.சி.சிவசங்கர் கலந்துகொண்டு நாளை நடைபெற உள்ள ”மதசார்பற்ற முற்போக்கு கூட்டணியின் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் குறித்தும் மற்றும் கழக ஆக்கப் பணிகள் குறித்தும் ஆலோசனைகள் வழங்கி உரையாற்றினார். உடன் ஜெயங்கொண்டம் சட்டமன்ற உறுப்பினர் க.சொ.க.கண்ணன், மாவட்ட துணை செயலாளர்கள் சி.சந்திரசேகரன், லதாபாலு மற்றும் மாவட்ட, ஒன்றிய, நகர கழக நிர்வாகிகள் பலரும் கலந்துகொண்டனர்.


